**கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி**
**அசல் வழக்கு எண். 96/2021**
**நாள் 11/06/2025 புதன்கிழமை**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பின் 2-வது சாட்சியின் வாக்குமூலம் 1878ம் ஆண்டில் 10-வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் – ஜெயா | க/பெயர் – ஆறுமுகம் |
| வயது – 55 | தொழில் – |
| விலாசம் – பரணம்பேடு | |

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை–**

1. இந்த வழக்கின் பிரதிவாதி என்னுடைய உடன்பிறந்த அக்காவின் மகன் ஆவார். எனது அக்கா பெயர் முனியம்மாள். எனது அக்கா முதல் கணவரின் பெயர் இராமநாதன் ஆவார். மேற்படி எனது அக்கா அவரது முதல் கணவர் உயிருடன் இருக்கும் போதே குழந்தையை அவரிடமே விட்டு விட்டு தனியாக பிரிந்து வந்துவிட்டார் என்றால் சரிதான். எனது அக்கா முதல் கணவரிடம் இருந்து பிரிந்து வந்து முனுசாமி என்பவரை கும்மிடிப்பூண்டியில் இரண்டாவதாக திருமணம் செய்ததாக கேள்விப்பட்டேன். நான் அந்த திருமணத்தை நேரடியாக பாா்க்கவில்லை. இந்த வழக்கானது வாதி மகேஸ் வசிக்கும் வீட்டிற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி வாதியின் வீட்டில் பிரச்சனை செய்ததால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

2. பிரதிவாதியும் அவரது மனைவியும் வாதியின் வீட்டிற்கு அருகில் உள்ள வீட்டில் வசிக்கிறார்கள் என்றால் சரிதான். பிரதிவாதியின் தாயார் இறப்பிற்க பிறகு சுமார் 3 ஆண்டுகளாக அந்த வீட்டில் பிரதிவாதியும் அவரது மனைவியும் வசித்து வருகிறார்கள்.

பிரதிவாதிக்கு யார் திருமணம் செய்து வைத்தது என்று எனக்கு தெரியாது. பிரதிவாதியை அவரது தாயார் அனாதையாக விட்டு வந்த பிறகு நான் தான் 2 ஆண்டுகாலமாக பிரதிவாதியை வளர்த்து வந்தேன் என்றால் சரியல்ல. நான் தான் பெண் பார்த்து திருமணம் செய்து வைத்தேன் என்றால் சரியல்ல. எனது அக்காவின் முதல் கணவர் இறந்துவிட்டார். அவரது இறுதி சடங்கிற்கு எனது அக்கா சென்று இறுதி சடங்கினை செய்தார். எனது அக்கா இறந்து சுமார் 3 வருடங்கள் ஆகிறது. எனது அக்காவிற்கு இறுதி சடங்கினை செய்து யார் என்றால் இந்த வழக்கின் பிரதிவாதி ஆவார். எனது அக்கா இறந்தவுடன் அவரது இரண்டாவது கணவர் முனுசாமி சிறிது காலாம் பிரதிவாதி வீட்டில் தான் வசித்தார் என்றால் அது பற்றி தெரியாது.

3. எனது அக்கா இறப்பிற்கு பிறகு அவரது இரண்டாம் கணவரை வாதி கவணிப்பதை நிறுத்திக்கொண்டார் என்றும் அவரை பிரதிவாதி தான் வீட்டில் வைத்து பராமரித்து வந்தார் என்றால் சரியல்ல. எனது சொந்த ஊர் கும்மிடிப்பூண்டி அருகில் உள்ள தேர்வழி கிராமம் ஆகும். எனக்கு எப்போது திருமணம் ஆகி பரணம்பேடு கிராமத்திற்கு வந்தேன் என்று தெரியாது. நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தில் உள்ளதை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். எனது வாக்குமூலத்தில் பரணம்பேடு கிராமத்தில் தான் பிறந்து வளர்ந்தேன் என்று கூறியுள்ளேன் என்றால் அது தவறு. தற்போது வாதி தனி வீட்டிலும் பிரதிவாதி மற்றொரு தனி வீட்டிலும் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். பிரதிவாதி வசிக்கும் வீடு அரசுக்கு சொந்தமான சர்வே எண்ணில் உள்ள வீடு என்றால் அது பற்றி தெரியாது. எனது அக்கா உடல் நிலை சரியில்லாமல் இருந்த போது உயில் எழுதி வைத்துள்ள விவரத்தை என்னிடம் கூறினார்.

4. எனது அக்கா மேற்படி இரு வீட்டினையும் உயில் எழுதி வைத்துள்ளதாக என்னிடம் கூறினார். நான் படிக்கவில்லை, ஆனால் உயில் எழுதியபோது நான் பார்த்தேன். மேற்படி உயில் வாதியின் வீட்டில் எழுதினார்கள். அந்த உயிலை எனது அக்காவின் பேரன் நந்தகுமார் என்பவர் கைப்பட எழுதினார். அது வெள்ளை தாளில் எழுதப்பட்டதா அல்லது முத்திரை தாளில் எழுதப்பட்டதா என்று தெரியாது. அந்த உயிலில் யார் சாட்சி கையொப்பம் செய்தது என்ற விவரம் எனக்கு தெரியாது. உயில் எழுதும் போது நான், எனது அக்கா, அக்காவின் பேரன் ஆகிய மூவர் மட்டும் இருந்தோம். நான் உயில் எழுதியதாக சொல்லப்படும் அன்று காலை 9 மணிக்கு வேலைக்கு சென்றுவிட்டேன். கைப்பட எழுதிய உயிலை தவிர வேறு உயில் தாக்கல் செய்யப்பட்டு இருந்தால் அது என் அக்கா எழுதிய உயில் அல்ல என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதி அவருக்கு சாதமாக ஒரு உயிலை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எங்களுக்கு பத்திர தாள் வேண்டும் என்றால் கும்மிடிப்பூண்டி, கவரப்பேட்டை, பொன்னேரியில் வாங்குவோம்.

5. பொதுவாக அந்த பகுதியில் வசிப்பவர்கள் பத்திர தாள் வாங்கவேண்டும் என்றால் கும்மிடிப்பூண்டி அல்லது பொன்னேரியில் வாங்குவார்கள் என்றால் சரிதான். வழக்கு சொத்தானது அரசாங்கத்தால் முனியம்மாளுக்கு வழங்கப்பட்ட சொத்தா என்றால் இல்லை. 2ம்வாதி மற்றும் பிரதிவாதி முனியம்மாளின் மகன்கள் என்றால் சரிதான். வழக்கு சொத்தில் பிரதிவாதிக்கும் சம பாகம் உள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதியின் பாகத்தை அபகறிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் பொய்யான உயில் ஏற்ப்படுத்தி தாக்கல்செய்துள்ளார் என்றும் அதற்கு

ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கும் பிரதிவாதிக்கும் விரோதம் உள்ளதால் அவர் எனது அக்காவின் மகன் அல்ல என்று ஆவேசத்தில் பொய் கூறுகிறேன் என்றால் சரியல்ல. அதனால் தான் நான் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி**
**பொன்னேரி**